# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 30 புதன்கிழமை (15-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:286


## நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் நேற்று நிவாரணப் பொருள்கள் விநியோகம்

### களஞ்சியப் பொறுப்பாளர் பொலீஸ் பாதுகாப்புடன் கூட்டிச் செல்லப்பட்டார்

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.நீதிமன்றத்தின் உத்தரவுப் படி பொலீஸ் அதிகாரியின் பாதுகாப்புடன அழைத்துச்செல்லப்பட்ட யாழ். செயலகக் களஞ்சியக் காப்பாளர் ஆர்.கதிர்காமநாதன் நேற்று கோண்டாவில், கொக்குவில் களஞ்சியங்களில் வைத்து உலர் உணவு நிவாரணப் பொருள் விநியோகத்தை மேற்கொண்டார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான இந்த மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்குமாறு யாழ்.நீதிவான் செயலக அதிகாரிகளுக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே.

அரசாங்கக் களஞ்சியத்தின் பொறுப்பாளர் விளக்கமறியலில் உள்ளதால் தடைப்பட்டிருந்த நிவாரணப் பொருள் விநியோகத்தை மேற்கொள்ள வசதியாக அவரைப் பொலீஸ் காவலுடன் களஞ்சியங்களுக்கு அழைத்துச் செல்லவும் யாழ்நீதிவான் இ.த.விக்னராஜா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம், வரணிப் பகுதிகளில் ஷெல் வீச்சுக்கு இருவர் பலியாகினர்!

தென்மராட்சி,நவ.15

தென்மராட்சியில் கொடிகாமம், வரணி, இயற்றாலை மற்றும் எருவன் பகுதிகளில் நேற்றுமுன்தினமும் நேற்றும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்தத் தாக்குதல்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இயற்றாலை மூத்த விநாயகர் ஆலயப்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பன் சின்னத்தம்பி (வயது70) என்பவர் கொல்லப்பட்டார். வரணி, எருவன் பகுதியில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் மாடு மேய்க்கச் சென்ற அதே இடத்தைச் சேர்ந்த முருகர் சிவராசா (வயது 48) என்பவர் கொல்லப்பட்டார்.

சமீபத்தில் இடம்பெற்ற அசம்பா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசனிலிருந்து கப்பற் சேவை; புலிகளின் சம்மதம் கேட்கப்பட்டுள்ளது

## அது கிடைக்காவிடில் "சிற்றி ஒவ் றிங்கோ" சேவை நீண்டகாலம் தாமதமாகும்

கொழும்பு,நவம்பர்15

**குடாநாட்டு மக்களுக்கான பயணிகள் கப்பற் சேவையை, பருத்தித்துறைக்குப் பதிலாக காங்கேசன்துறையில் இருந்து நடத்தும் பொருட்டு - விடுதலைப் புலிகளிடம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு - சம்மதம் - பாதுகாப்பு உத்தரவாதம் கேட்டுள்ளது.**

**அரசாங்க அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

குடாநாட்டுக்கான பயணிகள் கப்பல் சேவையை பாதுகாப்பாக நடத்தும் பொருட்டு - செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் நடத்தும் பொருட்டு - அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

பிரஸ்தாப முத்தரப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலேயே பயணிகள் கப்பல் சேவையை நடத்த இணங்கப்பட்டிருந்தது.

கடற்கொந்தளிப்புக் காரணமாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து தமிழகம் செல்லும்போது கைதாகி விடுவிக்கப்பட்ட 15 பேருக்கும் உலர் உணவு, ரூ.2 ஆயிரம் நிவாரணம்

### யாழ்.நீதிவான் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம்,நவ.15

வன்னியிலிருந்து தமிழகத்துக்கு படகில் செல்லும்போது புங்குடுதீவுக் கடலில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட 15 பேருக்கும் உலர் உணவு நிவாரணமும் இடம்பெயர்ந்தவர்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்படவேண்டும் என்று யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று உத்தரவிட்டார்.

இவர்களுடைய போக்குவரத்து வசதி எதிர்பாராத விதமாக தடைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'லங்கா முடித்த' 3 தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்படும்

யாழ்ப்பாணம்,நவ.15

குடாநாட்டில் போக்குவரத்து வசதியின்றி தடங்கலுற்று நிற்கும் மூவாயிரம் பொதுமக்களுக்கு பயணவசதி செய்யும் வகையில் 'லங்கா முடித்த' கப்பலை எதிர்வரும் 23ஆம் திகதி முதல் மூன்று தடவைகள் சேவையில் ஈடுபடுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலநிலை சீரில்லாத காரணத்தால் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் நடத்தப்பட்ட 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் சேவை இடைநிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதன் காரணமாகவே 'லங்கா முடித்த' கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கிறது.

இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு கடற்படைக்கு நேற்று வழங்கியுள்ளது.

கொழும்பில் இருந்து இன்று புறப்படும் 'லங்கா முடித்த' காங்கேசன்துறையில் பொருள்களை இறக்கிய பின்னர் எதிர்வரும் 23 ஆம் திகதிமுதல் மூன்று தடவைகள் பயணிகள் சேவையை நடத்தும்.(இ-3-8)

## விமானப் பயணிகளுக்கான பதிவு இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம்,நவ.15

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருக்கும் பயணிகள் விமான சேவையில் பயணம் செய்பவர்களின் விவரங்களைப் பதியும் பணி இன்று இடம்பெறவுள்ளதாக யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார்.

கண்டி வீதியில் வஸ்தியன் சந்திக்கு சமீபமாகவுள்ள வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின்(றாஸ்) அலுவலகத்தில் இந்தப் பணி இடம்பெறவிருக்கின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் புதிய படைப் பிரிவு 'ராதா படை அணி' அமைப்பு!

மட்டக்களப்பு,நவ.15

'ராதா படை அணி' என்ற புதிய படைப் பிரிவு ஒன்றை விடுதலைப் புலிகள் உருவாக்கி உள்ளனர்.

திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் உள்ள படைத்தளங்கள் மீது சமீபத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன் இந்தப் புதிய அணியை உருவாக்கியதாக புலிகளின் திருகோணமலை பிரசாரப் பொறுப்பாளர் தருமன் தெரிவித்தார்.

திருகோணமலைக் கடற்படைத் தளம் மீதான கடற்கரும்புலிகளின் தாக்குதலின் வெற்றியைக் கொண்டாடும் விழா கடந்த 10 ஆம் திகதி மூதூர் சம்பூர் கிராமத்தில் நடைபெற்றது. அதில் பங்குகொண்டு பேசும்போது தருமன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உலகிலேயே எங்குமில்லாதவாறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவி மீதான "ராகிங்" குறித்து விசாரணை

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவியான லோகநாதன் ரதிதேவி கடந்த செவ்வாய் அன்று திருநெல்வேலிப் பகுதியில் வைத்து சிரேஷ்ட மாணவிகளால் "ராகிங்" கொடூரத்துக்கு ஆளாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என துணைவேந்தர் பேராசி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கிக் கடமையிலிருந்த கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை

### காத்தான்குடியில் நேற்றுச் சம்பவம்

மட்டக்களப்பு,நவ.15

மட்டக்களப்பு மாவட்டம் - காத்தான்குடி நகரில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் கடமையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்தவர்களே மோட்டார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(14-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ 666,942.50**

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.நகரிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாழ், மட்டுவிலில் புலிகள் மோட்டார் தாக்குதல்

### நான்கு படையினர் காயமடைந்தனர்

கொழும்பு,நவ.15

எழுதுமட்டுவாழ் மற்றும் மட்டுவில் பகுதிகளில் உள்ள படையினரின் நிலைகள் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் நான்கு படையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

## சர்வதேச ஊனமுற்றோர் தினம்

## 03.12.2000

மேற்படி தினத்தை முன்னிட்டு பின்வரும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

* ஊனமுற்ற ஆண், பெண்களுக்கான முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி 03.12.2000 அன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தமது பெயர்களை சங்கத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
* பாடசாலை மாணவர்களின் வினாவிடைப் போட்டி 19.11.2000 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.
* பரிசளிப்பு, ஏனைய போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பன 03.12.2000 அன்று ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் நடைபெறும்.

(C/13837) - தலைவர்.

# உரும்பிராய் லயன்ஸ் கழகம்

We Serve

## பாராட்டி வாழ்த்துகின்றது



எமது கழக உப தலைவர்களில் ஒருவரான

லயன்

**வே.சின்னத்துரை**

அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/13833) உரும்பிராய் லயன்ஸ் கழகம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நீதி அமைச்சால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்ட

**உயர்திரு. சி.திசவீரசிங்கம்**

(பொருளாளர், ஸ்ரீநாகபூசணி அம்பாள் தேவஸ்தானம், சண்டிலிப்பாய் - இளைப்பாறிய ஆசிரியர், யாழ்/இந்துக் கல்லூரி)

அவர்களை அம்பாளின் அருட்கடாட்சத்தின் துணைகொண்டு அவர்தம் பணி மேலும் சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சீரணி,
சண்டிலிப்பாய். (80550) தருமகர்த்தா சபை

# ஓராண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | ஆண்டவன் அணைப்பில் |
|---|---|---|
| 12 |  | 28 |
| - | | - |
| 12 | | 10 |
| - | | - |
| 1982 | | 1999 |

**செல்வி செல்லக்கண்டு விமலேஸ்வரி**

(உயர்தர மாணவி - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாசாலை.)

திதி : 15-11-2000 புதன்கிழமை

வீசு குளிர் தென்றலென
விளங்கி வந்த மகளே!
விதியடித்த காற்றினிலே
விழுந்துவிட்ட மலரே!
பேசுகிளி யாய் குலவும்
பிள்ளையென வந்தாய்!
பேரிடியே தந்து எமை
புலம்ப விட்டு சென்றாய்!

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அழைப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி...! ஓம் சாந்தி.....! ஓம் சாந்தி.....!

தகவல்:
செல்லக்கண்டு (தகப்பன்),
அன்னமுத்து (தாய்),
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (80541)

உன்பிரிவால் துயருறும்
தாய், தந்தை,
உற்றார், உறவினர்கள்.

# விளையாட்டு நிகழ்வுகள்

ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் புத்தாயிரம் ஆண்டுக்கான எச்.என்.பி. வெற்றிக்கேடயத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3ஆவது இடங்களைத் தெரிவு செய்வதற்கான ஆட்டங்கள் இன்று பிற்பகல் யாழ்.இந்து ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3.30மணி - பெண்கள் - வேம்படி மகளிர் எதிர் கொக்குவில் இந்து.
* பிற்பகல் 4.30 மணி - யாழ். மத்திய கல்லூரி எதிர் சென். ஜோன்ஸ் கல்லூரி

* * *

வலிகாமம் கல்வி வலயம் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் 14வயதுப்பிரிவில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3மணி முதல் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் பண்டத்தரிப்பு ஜசிந்த றோ.க.த. கலவன் பாடசாலையும் இறுதியாட்டத்தில் மோதும்.

மாதகல் சென்.யோசெப் வித்தியாலயமும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மோதவிருக்கின்றன.

* * *

மல்லாகம் வித்தியோதய பாலர் பாடசாலை விளையாட்டுவிழா இன்று புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய மைதானத்தில் அந்த பாடசாலை பெற்றோர் சங்கச் செயலாளர் ரி.அன்ரனி தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் சர்வோதய செயற்திட்ட அத்தியட்சகர் எஸ்.வி. சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராகவும் மல்லாகம் கிராம உத்தியோகத்தர் எஸ்.பூபாலசிங்கமும் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய அதிபர் என்.மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வர். (இ-3)

## பிரத்தியேக வகுப்புகள்

கட்டுடை, மானிப்பாய்

**2001 A/L**

மீட்டலும்
வினா விடையும்

இரசாயனவியல்:-
திரு.மணியம்
புதன், வியாழன் 3-4 p.m

இணைந்த கணிதம்:-
திரு.குணம்
புதன், வியாழன் 4-5.30 p.m

ஆரம்பம்:-
இன்று (15-11-2K)

(80526)

## லஷ்சுமி சினிமா

இணுவில்

அர்ஜுன், ரம்பா

நடித்த

**சுதந்திரம்**

ரீல்ஸ்

காட்சிகள்:10.30, 2.30 (ப.நே.)

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்

சிவா, மோகினி,
நாசர், ஸ்ரீவித்தியா
மற்றும் பலரின் நடிப்பில்

**சுதந்திரமான ரோஜாவே**

காட்சிகள்:10.30, 2.00 (ப.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்

அஜித் (இரு வேடம்),
சிம்ரன், விவேக்
நடித்த

**வாலி**

(ரீல்ஸ்)

காட்சிகள்- 11.00, 2.30 (ப.நே)

(C/13816)

# பாராட்டி ஆசி கூறுகின்றோம்



வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி மற்றும் தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சரும் எமது கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த கரிசனையுள்ளவருமாகிய

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை பாராட்டி ஆசி கூறுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திக் குழு.
(80554) யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

# 'மனிதமும் மதமும்'

## வெளிவந்துவிட்டது!

அல்லைக் கவிஞர் பண்டிதர் க.வ.ஆறுமுகம் அவர்களால் ஆக்கப்பட்டதும்

நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை B.A.(Cey.)

(அதிபர் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்)

அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்டதுமான 'மனிதமும் மதமும்'

எனும் குறுங்காவிய கவிதை நூலின் திருத்திய 2 ஆம் பதிப்பு வெளிவந்துவிட்டது. யாழ்.நகரின் பிரபல புத்தக விற்பனை நிலையங்கள் யாவற்றிலும் பதிப்பாசிரியரிடமும் பெற்றுக்கொள்ளலாம். பக்கங்கள் 30.

நூலொன்றின் விலை ரூபா 40/= மட்டுமே. (80551)

# தனியார் பாதுகாப்புச் சேவை

## பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

01.01.2001 தொடக்கம் 31.12.2001வரையான காலப்பகுதிக்கு தனியார் பாதுகாப்புச் சேவைக்கு போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாததால் மீண்டும் என்னால் விண்ணப்பங்கள் 30.11.2000 காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் காலை 10.00 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும்.

விண்ணப்பங்களை 250/- பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பின்வரும் ஆவணங்கள் கட்டாயமாக இணைக்கப்படுதல் வேண்டும்.

01. பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்.
02. சேவை முன் அனுபவம்.
03. நிதி நிலைத் தகைமை (6 மாத கால வங்கிக்கூற்றும், வருமானவரிப் பற்றுச் சீட்டும்)

மேலதிக விவரங்களை வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்
வைத்தியகலாநிதி (செல்வி)
**நவமலர் கனகரத்தினம்**
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C/13836)

# மரண அறிவித்தல்

## திருமதி அப்புத்துரை வள்ளியம்மை

தையிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் சந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை வள்ளியம்மை நேற்று (14.11.2000) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி அப்புத்துரையின் அன்பு மனைவியும் சாந்தநாயகி, பிரதாபன்(ஆசிரியர்), காஞ்சனா, இந்துமதி(ஆசிரியை), தனமதி(ஆசிரியை), ஆனந்தி(ஆசிரியை) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவசுந்தரம்(C.T.B., கோண்டாவில்), சிவாஜினி, விஜயபாலசிங்கம்(காணிப் பதிவகம்), ஜீவானந்தன்(L.M.S., புல்மோட்டை), கதிர்காமநாதன்(V.C., மல்லாகம்), இராமேஸ்வரன்(T.V. தொழில்நுட்பவியலாளர்) ஆகியோரின் அன்பு மாமியும் சஜீவன், நிவேதிகா, வினோதிகா, லக்ஷி, கீர்த்திகா, யஸ்மிதா, யதுப்பிரியா, யாதவி, பிரதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.11.2000) காலை 11.00 மணிக்கு சந்திரபுரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*சந்திரபுரம்,*
*முதலாம் கட்டை,*
*மானிப்பாய் வீதி,*
*உடுவில்.*

தகவல்:
பிரதாபன் (மகன்)

(80555)

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 2000

(1) 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 2000ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டது என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| *பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள்.* | *பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள்.* |
|---|---|
| 2. 1. மாவட்டத் தேர்தல்கள அலுவலகம். | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2. 2. பிரதேச செயலகம். | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதாஎன்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

(4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் இடுவித்துக்கொள்ளலாம்.

4. 1. இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள் பகுதிக் கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

4. 2. பதியப்படுவதற்கான தகைமை பற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும் இவ் விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

(5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

*பதிவு அலுவலர்,*
*தேர்தல் மாவட்ட இல. 10. யாழ்ப்பாணம்.*

*செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2000 ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி.*

---

### ஒரு தேருநராகப் பதியப்படுவதற்கான

## விண்ணப்பப் பத்திரம் - 2000

(1) .................................... பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்.

.................................................. ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராக பதிவு செய்துகொள்ள இத்தால் விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

(2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விபரங்கள் தரப்படுகின்றன.

2. 1. முழுப்பெயர்:

..................................................

2. 2. முகவரி:

..................................................

..................................................

2. 3. பிறந்த திகதியும் வயதும்:

..................................................

..................................................

2. 4. 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?

..................................................

2. 5. பால்: ..................................................

2. 6. இனம்: ..................................................

2. 7. பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக.

..................................................

2. 8. தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்:

..................................................

2.9. கிராம உத்தியோகத்தரின் பிரிவு:

..................................................

..................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ....................

---

## கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகின்றது / செய்யப்படவில்லை.

சிபார்சு செய்வதாயின் பின்வரும் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

வாக்கெடுப்புப் பிரிவு:

..................................................

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் :..................................

வீட்டு இலக்கம் :..................................

கிராமம் / வீதி :..................................

..................................................

கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும் பிரிவின் இலக்கமும்

திகதி :....................

(C/ 13646)

---

# அமைச்சர்களின் பாதுகாப்பை மேலும் தீவிரமாக்க ஏற்பாடு

கொழும்பு,நவ.15

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான பாதுகாப்பு மேலும் தீவிரப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர்களுக்கான பாதுகாப்புப்பிரிவின் தலைமை அதிகாரி ஜெயந்த ஜெயசிங்க செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதற்காக பாதுகாப்புப் படைகளில் இருந்து ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களினதும், பிரதியமைச்சர்களினதும் நடமாட்டங்கள் குறித்த விவரங்களை இரகசியமாகப் பேணுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விசேட பயிற்சி பெற்ற பொலீஸ் அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-7)

---

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| **13.11.2000 (திங்கட்கிழமை) வரை கிடைத்த நிதி:-** | ரூபா |
|---|---|
| முன் கொண்டு வரப்பட்டது | - 633,553 |
| 01. பாங்குத்தந்தை பங்கு மக்கள் - புனித சவேரியார் ஆலயம், திருநெல்வேலி | - 3,000 |
| 02. பங்கு மக்கள் - தென் கோப்பாய் புனித மரியாள் கத்தோலிக்க ஆலயம் | - 2,100 |
| 03. பங்கு மக்கள் - கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலயம் | - 1,700 |
| 04. ஓர் அன்பர் - அமரர் வ. பொன்னுச்சாமி அவர்களின் ஞாபகார்த்தமாக, வட்டுக்கோட்டை | - 225 |
| 05. தமிழ்ப் பற்றாளர் - உரும்பிராய் | - 2,000 |
| 06. டி. ராஜகோபால் - 123, கஸ்தூரியார் றோட், யாழ். | - 500 |
| 07. ஆர். ஜி. மெசின் கட்டிங் - 273, கஸ்தூரியார்வீதி, யாழ். | - 200 |
| 08. ஏ. வி. துரைரட்ணம் - 32, முதலியார் லேன், நல்லூர் தெற்கு, யாழ். அமரர் பாஸ்கரன் நினைவாக | - 300 |
| 09. ஓர் அன்பர் - ராசேந்திரம் வீதி, உரும்பிராய் வடக்கு | 100 |
| 10. முன்பள்ளி ஆசிரியர் - கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம் | - 1,000 |
| 11. பொதுமுகாமையாளர், பணியாளர்கள் - உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் | - 6,000 |
| 12. அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் - யா/புலோலி மெ. மி. த. க. பாடசாலை, புலோலி | - 2,801 |
| 13. செல்லையா விஜயரட்ணம் - சமாதான நீதிவான் - (மாநகராட்சிமன்ற உறுப்பினர்) 451, மானிப்பாய்வீதி, யாழ். | - 1,100 |
| 14. ஒரு சகோதரி - கோட்டைக்காடு, மல்லாகம் | - 200 |
| 15. ஓர் அன்னை - மீசாலை மேற்கு, மீசாலை | - 500 |
| 16. ஜனநாயகத்தைத் தேடும் வீரேசன் - ரதீசன் | - 205 |
| 17. அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் - சேர்/வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம், வேலணை | - 1,325 |
| 18. செ. ஐயம்பிள்ளை - சுன்னாகம் | - 500 |
| 19. நலன்விரும்பிகள் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம் | - 2,000 |
| 20. போருட் வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகு முதலாம் வருட மாணவர்கள், தம்பசிட்டி. | - 400 |
| மொத்தம்: | 660,209 |

---

## துரைராஜா நினைவுரை

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் ஆ.துரைராஜா, முன்னாள் பதிவாளர் வே.ந.சிவராசா ஆகியோரின் 67 ஆவது பிறந்த நாள் நினைவுரைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர் துரைராஜா நினைவுரையை பேராசிரியர் செ.சிவஞானசுந்தரமும், சிவராசா நினைவுரையை பேராசிரியர் சு.பவானியும் நிகழ்த்தவுள்ளனர். (ஜ-5)

## பண்ணையாளர் பயிற்சி வகுப்பு

வடமராட்சி,நவ.15

ஆடு வளர்ப்போருக்கான பண்ணையாளர் பயிற்சி வகுப்பு இமையாணன் வீரகத்தி விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்பில் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் புனிதம் தங்கராசா விரிவுரை நிகழ்த்துவார்.

25 பெண்கள் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வர். பயிற்சி முடிவில் கால்நடை வளர்ப்பு சம்பந்தமான வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்படும். (ஜ-173)

## அறக்கொடை விழா

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 76 வயதுப் பூர்த்தியை ஒட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் அறக்கொடை விழா நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 150 உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். மாவிட்டபுரத்தைச் சேர்ந்த பொ.பாலசுந்தரம் அறநிதியத்துக்கு அன்பளிப்புச் செய்த நிலையான வைப்பிலிட்ட ஐந்து லட்சம் ரூபாவின் இந்த வருடவட்டி இந்தக் கல்வி உபகரணங்கள் அன்பளிப்புக்குப் பயன்படுத்தப்படும்.

கண் சத்திர சிகிச்சை செய்து மருந்துகள் பாவிக்க வசதியற்றவர்களுக்கு மருந்துகள் கொள்வனவு செய்து வழங்குவதற்கு முப்பதினாயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்படும்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி எழுதிய 'பெண்மைக்கு இணையுண்டோ?' என்ற நூல் வெளியிடப்படும்.

துர்க்காதேவி தேவஸ்தான உபதலைவர் மு.சபாநாதன் தலைமையில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற அறநிதிய சபையின் கூட்டத்தில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. (ஜ-8)

## சாயி பாபா ஜெயந்தி தின நிகழ்வு

வடமராட்சி,நவ.15

பருத்தித்துறை சாயி மந்திர இல்லத்தில் பகவான் ஸ்ரீசத்யசாயிபாபாவின் 75 ஆவது ஜெயந்தி தின நிகழ்வுகள் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 1.00மணி வரை நடைபெறும்.

பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் 'அன்புத் தெய்வம் பாபா' என்ற தலைப்பில் சத்யசாயி மனித மேம்பாட்டுக் கல்விப்பிரிவின் தேசியத் தமிழ்க் கல்விப் பணிப்பாளர் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம்(நந்தி) உரையாற்றுவார்.

ஓம்காரம், அஷ்டோத்திர பஜனை என்பனவும் இடம்பெறும். (ஜ-173)

அமெரிக்க அதிபர் பதவித்தேர்தல்:

# மறுவாக்கு எண்ணிகைக்கு மியாமி நீதிமன்றம் அனுமதி

வாஷிங்ரன், நவ. 15

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில் புளோரிடா மாகாணத்தில் 4 கவுண்டிகளில் கணனியைத்தவிர்த்து ஆள்கள் மூலம் மீண்டும் வாக்குள் எண்ணப்படுவதைத் தடுக்குமாறு புஷ்ஷின் குடியரசுக் கட்சியினர் தாக்கல் செய்த மனுவை மியாமி பெடரல் நீதிமன்றம் நிராகரித்தது.

இதனை அடுத்து அங்கு மறு எண்ணிக்கை ஆரம்பமாகி உள்ளது. மறு எண்ணிக்கை இன்று காலைக்குள் முடிவடைய வேண்டும் என்று மாகாணச் செயலர் கேபரின் ஹரித் அறிவித்துள்ள போதிலும், இந்தக் காலக்கெடு நீடிக்கப்பட வேண்டும் என்று அல்கோரின் ஜனநாயகக்கட்சியினர் கோரி உள்ளனர்.

மறுவாக்கு எண்ணிக்கை சட்டத்துக்கு உட்பட்டது என்று கூறியுள்ள ஜனநாயகக்கட்சியினர், ஆள்கள் மூலம் எண்ணினால் மட்டுமே மக்களின் உண்மையான எண்ணங்கள் வெளிவரும் என்று வாதிடுகின்றனர். (ஒ-8)

வளைகுடாநாடான குஜெய்ராவில்

# தகாத உறவு கொண்டிருந்த இலங்கைப்பெண்ணுக்கு கசையடி

குஜெய்ரா என்ற வளைகுடா நாட்டின் இஸ்லாமிய நீதிமன்றம் தகாத உறவுகளைக் கொண்டிருந்த குற்றத்துக்காக இலங்கைப் பெண் ஒருவருக்கு 120 கசையடிகளுடன் 14 மாத சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

குற்றவாளியான பெண் மணியுடன் உறவு கொண்டிருந்ததற்காகக் கைதான அவரது காதலனான இந்தியரை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

ஆனால் காதலருடன் சேர்ந்து மது அருந்திய குற்றத்துக்காக குறிப்பிட்ட இலங்கைப் பெண்ணுக்கு உள்நாட்டுப்பணமான ஆயிரம் திர்கம்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

விதிக்கப்பட்ட தண்டனைகளை அனுபவித்த பின்னர் இந்தப் பெண் இலங்கைக்கு நாடுகடத்தப்படுவார் எனக் கூறப்படுகிறது. (ஒ-8)

# கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட பா. ஜ. அமைச்சர்கள் ராஜினாமா

புதுடில்லி, நவ. 15

இனக்கலவரத்தின்போது, இடம்பெற்ற உயர் பொலீஸ் அதிகாரி ஒருவரின் கொலை தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் இரு அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர்.

குஜராத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடியினருக்கும், அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்குவது என மாநில அரசு தீர்மானித்ததையடுத்து 1985 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மீதான வன்முறைக் கலவரங்கள் மாநிலமெங்கும் நடந்தன.

இந்த இனக்கலவரத்தின்போது, கலவரத்தை அடக்குவதில் சிறப்பாகச் செயல்பட்ட உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில், மத்திய பாதுகாப்பு உற்பத்தித்துறை இணை அமைச்சர் எச்.பதக் மற்றும் மாநில அரசின் பாரதியஜனதா அமைச்சர் அசோக்பட் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் இருவரும் தமது பதவிவிலகல் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஏற்கனவே இந்துமதவாத அமைப்பாகச் சித்திரிக்கப்படும் பாரதீய ஜனதாக்கட்சிக்கு, பதக் மற்றும் பட் மீதான குற்றச்சாட்டு மேலும் சங்கடங்களை உருவாக்கும் எனக் கருதப்படுகிறது. (ஒ-8-6)

பலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவித்த

# இஸ்லாமியத் தலைவர்களுக்கு இஸ்ரேல் பிரதமர் கண்டனம்

டெல்அவிவ், நவ. 15

பலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவித்த இஸ்லாமியத் தலைவர்களுக்கு இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படைகளை எதிர்த்து 'ஜிகாத்' எனப்படும் புனிதப் போர் புரிந்துவரும் பலஸ்தீனர்களுக்கு இஸ்லாமிய நாடுகள் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கட்டாரில் நடந்த 9 ஆவது இஸ்லாமிய மாநாட்டில் ஈராக், சூடான் ஆகிய நாடுகள் அழைப்பு விடுத்ததையே பராக் கண்டித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க முஸ்லீம் தலைவர்களின் பலஸ்தீனத்துக்கான ஆதரவு ஒருபோதும் பயன் அளிக்காது என்றும் பிரதமர் எகுட்பராக் சுட்டிக் காட்டியுள்ளார்.

கட்டாரில் அதன் மன்னர் ஷேக்ஹமத் தலைமையில் நடந்த இஸ்லாமிய மாநாட்டு அமைப்பின்கூட்டத்தில்கலந்து கொண்ட 56 நாடுகளில் பெரும்பாலானவை இஸ்ரேலுடனான ராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டும என்ற தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# வீரப்பனிடம் மீண்டும் தூது

சென்னை, நவ. 15

நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பது தொடர்பாக சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனுடன் பேச்சு நடத்த 6ஆவது தடவையாக 'நக்கீரன்' கோபால் காட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கோபாலுடன் பழ.நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி, புதுவை சுகுமாரன் ஆகியோரும் உடன் சென்றுள்ளனர்.

# ஹெலி விபத்துக்குள்ளானதில் 7 இந்திய வீரர்கள் இறந்தனர்

புதுடில்லி, நவ. 15

இந்தியாவில் கடந்தஞாயிற்றுக்கிழமை காணாமல் போயிருந்த எல்லைப் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான ஹெலி குஜராத் மாநிலகஞ்ச் எல்லைப் பகுதியில் நொருங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விபத்தில் ஹெலியில் பயணம் செய்த உயர் அதிகாரிகள் உட்பட 10 பேரில் 7 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்த விமானப் படை அதிகாரி ஒருவர், 3 வீரர்கள் உயிர் தப்பி அருகிலிருந்த இராணுவ முகாமை வந்தடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

டுக் கொண்டிருந்த போது விபத்துக்குள்ளான ஹெலி விமானப் படையின் கட்டுப்பாட்டுப் பிரிவுடனான தொடர்பை இழந்திருந்தது.

இதனையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையினால் கடந்த திங்கட்கிழமை மாலை நலியார் விமானத் தளத்தின் வடக்கே 90கிலோ மீட்டர் தொலைவில் ஹெலி விபத்துக்குள்ளாகியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

ஹெலி விபத்துக்குள்ளான சமயம் அருகில் இருந்த கடல் பகுதியில் 3 மீன் பிடிக் கப்பல்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்ததாகவும் அங்கு இந்தியக் கடற்படைப் படகுகள் எதுவும் பணியில் ஈடுபட்டிருக்கவில்லை என்றும் விபத்தில் உயிர் தப்பிய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் கூறியுள்ளனர்.

கனரக ஆயுதத்தால் சுடப்பட்டதாலேயே ஹெலி விழுந்து நொறுங்கியதாகக் கூறப்படுகின்றது. இதனை உறுதி செய்ய முடியவில்லை என்றுகூறிய இந்திய விமானப் படைத் தளபதி சுடப்பட்டு இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக ஒப்புக் கொண்டார். (ஒ-8)

## உலக அரங்கில்

கடந்த ஞாயிறு அன்று இந்திய எல்லையிலிருந்து 10 கிலோ மீற்றர் உள்புறமாக ரோந்துப் பணியில் ஈடுபட்

# இந்தியாவில் 28 ஆவது மாநிலம் உதயமானது

ராஞ்சி, நவ. 15

இந்தியாவின் 28 ஆவது மாநிலமாக ஜார்கண்ட் மாநிலம் நேற்று நள்ளிரவு உதயமானது. பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த பாபுலால் மராண்டி புதிய மாநிலத்தின் முதல் முதலமைச்சராகப் பொறுப்பேற்க உள்ளார்.

ஜார்கண்ட் முக்திமோர்ச்சா கட்சிக்கும், பாரதீய ஜனதாவுக்கும் முதலமைச்சர் பதவியைப் பெறுவதில் கடும் போட்டி நிலவிவந்தது குறிப்பிடத்தக்கது.

# ஒபெக் தீர்மானம்

வியன்னா, நவ. 15

தொழில்வள நாடுகள் மசகு எண்ணெய் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படும் என்று அச்சம் தெரிவித்துள்ள போதிலும், எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதில்லை என்று வியன் [illegible] எண்ணெய்வள நாடுகளின் அமைப்பான ஒபெக்கின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதிக உற்பத்தியால் மசகு எண்ணெயின் விலை குறையக் கூடும் என்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-8)

# பிலிப்பைன்ஸின் அதிபர் மீது விசாரணை

மணிலா, நவ. 15

பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசப் எஸ்ரோடா மீது ஊழல் குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

செனட் நீதிமன்றத்தில் அதிபர் மீதான விசாரணை நடைபெறும்.

சட்டவிரோத சூதாட்டக்காரர்களிடமிருந்து சுமார் 80 லட்சம் டொலர்களை லஞ்சமாகப் பெற்றதாக அதிபர் எஸ்ரடோ மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (ஒ-8)

# மும்பையில் பங்கு விலைகள் கடும் சரிவு

மும்பை, நவ. 15

அமெரிக்க அதிபர் தேர்தலின் நிச்சயமற்ற நிலையால் இந்தியாவின் மும்பைப் பங்குச் சந்தையில் பங்கு விலைகளில் கடும் சரிவு எற்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இயங்கி வந்த

# துப்பாக்கித் தொழிற்சாலை தமிழகத்தில் கண்டுபிடிப்பு

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் சட்ட விரோதமாக இயங்கிய கைத்துப்பாக்கித் தொழிற்சாலை ஒன்றைக் கண்டு பிடித்த பொலீஸார் இது தொடர்பாக 4 பேரைக் கைது செய்துள்ளனர்

கடந்த ஞாயிறு இரவு திண்டுக்கல் பழனி சாலையில் கண்காணிப்பில்ஈடுபட்டிருந்த பொலீஸார் உரிமம் பெறாது கைத்துபபாக்கி வைத்திருந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணைகளின் போது கிடைத்த தகவல்களைக்கொண்டு தேனி மாவட்டத்தில் மதுரை அருகே இரகசியமாகஇயங்கிவந்த துப்பாக்கித் தொழிற்சாலையைக் கண்டுபிடித்ததுடன் மூவரைக் கைது செய்துள்ளனர்.

மேற்படி தொழிற்சாலையில் தயாரித்து பதுக்கி வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கிகள் சர்வதேசத்தரத்துக்கு நிகராக இருந்தது தமக்கு வியப்பளிப்பதாகப் பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயர்ரகப் பூட்டுக்களுக்குப் புகழ் பெற்ற திண்டுக்கல்லில் பூட்டுத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் சிலர் தொழிலின்மையால் துப்பாக்கித் தயாரிப்பில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-8-7)

# நீரிழிவு நோயாளி உடலுக்குள் செயற்கை இன்சுலின் சுரப்பி

## பிரெஞ்சு மருத்துவர்கள் சாதனை

பாரீஸ், நவ. 15

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உடலுக்குள் செயற்கைச் சுரப்பி ஒன்றைப் பொருத்தும் முயற்சியில் பிரான்ஸ் மருத்துவ நிபுணர்கள் முதல் தடவையாக வெற்றி அடைந்துள்ளனர்.

இரத்தத்தில் சீனிச் சத்தின் அளவு அதிகரிக்கும் நீரிழிவு நோயாளிகள், அதனைக் கட்டுப்படுத்தும் இன்சுலினை, தொடர்ந்து ஊசிமூலம் உட்செலுத்துவதை செயற்கைச் சுரப்பி முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

செயற்கைச் சுரப்பியைப் பொருத்திய மருத்துவக் குழுவுக்கு தலைமை வகித்த பேராசிரியர் எரிக் டொனைல்ட் கூறுகையில்—

உடலினுள் பொருத்தப்பட்ட சுரப்பி பற்றறி மூலம் இயங்கும். இது இரத்தத்தில் உள்ள சீனிச்சத்தின் அளவை இரத்தக்குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ள உணர்திறன் காட்டியினால் அறிந்து கொண்டு, அடி வயிற்றில் பொருத்தப்பட்டுள்ள இன்சுலின் கொள்கலனிலிருந்து இன்சுலினை தேவையான அளவு வெளிவிடும். கொள்கலனை 3 மாதங்களுக்கு ஒருமுறை இன்சுலினை செலுத்திநிரப்ப முடியும் என்று—தெரிவித்தார். (ஒ-8)

# தொழிலதிபரின் மரணத்துக்கு சிறை அதிகாரிகளே பொறுப்பு

## நீதிமன்றத்தில் சி. பி. ஐ. தெரிவிப்பு

புதுடில்லி, நவ. 15

இந்தியச் சிறையில் இருந்த சமயம் உயிரிழந்த தொழிலதிபரின் மரணத்துக்கு சிறை அதிகாரிகளே பொறுப்பு என்று மத்திய புலனாய்வுத் துறையினர் டில்லி நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

1995 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் வசித்த இந்தியத்தொழிலதிபரான ராஜன் பிள்ளை என்பவர் அங்கு சில வழக்குகள் தொடர்பாக தேடப்பட்டு வந்ததால் இந்தியா வந்தார்.

அப்போது அவரைக் கைது செய்த மத்திய புலனாய்வுத் துறையினர் அவரை நீதிமன்ற உத்தரவுப்படி திகார் சிறையில் அடைத்தனர். சிறையில் ராஜன் பிள்ளை மர்மமான முறையில் மரணமானார்.

இந்த மரணம் தொடர்பாக அரசியல் சாமியார் சந்திரசுவாமி, தொழிலதிபர் நுஸ்லிவாடியா ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு டில்லி தலைமை நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே மத்திய புலனாய்வுத் துறையினர் சிறை அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தியுள்ளனர். (ஒ-8)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில்
ஆசிரியர்களாகவும், கனிஷ்ட அதிபர்களாகவும்
முப்பது ஆண்டுகளுக்கு மேலாக
அரும்பணியாற்றி அண்மையில்

**அகவை அறுபதை**

நிறைவு செய்து ஓய்வு பெற்றுள்ள

**திருமதி செல்லமுத்து தம்பு**
**திருமதி மகாலட்சுமி பத்மநாதன்**

அவர்களையும் பதினொரு ஆண்டுகளுக்கு மேலாக ஆரம்பக் கல்வியை சிறப்பாகப் போதித்து ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர்

**திருமதி கனகாம்பிகை சற்குணசிங்கம்**

அவர்களது சேவையினையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து பாராட்டி இவர்களது ஓய்வுகாலம் சந்தோஷமாக அமைந்திட வாழ்த்துகின்றோம்.

இவ்வாண்டு பல்கலைக் கழகம் சென்றுள்ள மாணவர்கள்

செல்வி இ. ஜெயவதனா செல்வி மு. விஜி
செல்வி ந. தாமிரா செல்வி வி.பகிறஞ்சனி
செல்வி ந. சசிநீகா செல்வி க. சுபாசினி
செல்வன் ந. ஜசிந்தன் ஆகியோரையும்

நுண்கலைக் கல்லூரிக்குத் தெரிவாகியுள்ள

செல்வி வே. ஜீவராணி (நடனம்)
செல்வி செ. செல்வகுமாரி (சங்கீதம்)
செல்வி பா. சுஜாதா (சங்கீதம்)

ஆகியோரையும் மனதாரப் பாராட்டிப் பல்கலைக் கழகத்தில் சிறப்புச் சித்திகள் பெற்று உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

இவ்வாண்டுநடைபெற்ற தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று பெருமையைத் தேடித்தந்த மாணவர்களான

செல்வி ப. தர்சிகா செல்வி க. சீபாஜினி
செல்வன் அ. வித்தியாதரன் செல்வி த. கெங்கா
செல்வன் சி. யதுர்சன் செல்வன் ஜெ.மதிமுகன்
செல்வன் ச. றூபதீசன் செல்வி சி. அகல்யா
செல்வி ஜெ. சிந்துஜா செல்வி அ. மனோசசி
செல்வி க. கஜூசா செல்வன் ச. கஜநீதன்

ஆகிய பன்னிருவரையும் பாராட்டுவதுடன் அவர்களின் எதிர்காலம் மேலும் சிறப்பாக அமைந்திட இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலையின் வளர்ச்சியில் அல்லும் பகலும் அயராதுஉழைத்து பாடசாலையைச் சிறந்த முறையில் நெறிப்படுத்தி வரும் அதிபர் திருவாளர் கு. சிவானந்தம் அவர்களையும், நீண்டகாலமாகப் புலமைப் பரிசில் வகுப்பினை கற்பித்து வரும் ஆசிரியர்களான திருமதி சு.கார்த்திகேசு, திருமதி இ. அமிர்தகுலசிங்கம் ஆகியோரையும், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் யாபேரையும் மனதாரப் பாராட்டி போற்றி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்,
யா/ மீசாலை வீரசிங்கம் ம. வி.

(80531)



# இன்று 21 ஆம் ஆண்டு நினைவு தினம்



தாயின் மடியில் 27 — 06 — 1956

உதிரிஞ்சி குமரன் பாதத்தில் 15 — 11 — 1979

**உத்தம செல்வி கமலாசினி விநாயகமூர்த்தி**
(பட்டதாரி, பேராதனைப் பல்கலைக்கழகம்)

உங்கள் ஆத்ம சாந்திக்காக நினைவு கூரும்:

பெற்றோர், சகோதர
சகோதரிகள் குடும்பங்கள்,
உற்றார், உறவினர்கள் அயலவர்கள்.
நண்பிகள், நண்பர்கள்.

'திலகஸ்தான்'
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(சி/ 13830)


## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 15

தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும்.

பொறியியல் ஆலோசகர் ச. கனகசபையும், டாக்டர் திருமதி சிவபாதநாயகி கனகசபையும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி செல்லையா கலந்து கொள்வார்.

(ஐ)

## திருச்சபை ஆண்டு விழா

வடமராட்சி, நவ. 15

தென்னிந்தியத் திருச்சபையின் நவாலி திருச்சபையின் 140 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்ப்பாணம் மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு அருட். திரு. கே.கருணசேகரா அருட் செய்தி வழங்குவார். யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'கூடித் துயர் வெல்' எனும் சிறுவர் நாடகமும் இடம்பெறும்.

இவ்வாண்டு விழாவை ஒட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். மறை மாவட்ட பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் நன்றி நல்கும் நற்கருணை வழிபாட்டை நடத்தினார். வழிபாட்டின்போது திருச்சபையின் மூத்த அங்கத்தவர்கள் 14 பேர் பேராயரால் மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

(ஐ-173)




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்)

**விசேட அனுமதித் தேர்வு 1999 /2000**

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பித்து, ஏற்கனவே நடைபெற்ற அனுமதித் தேர்வுக்குத் தோற்றாத மாணவர்களுக்கான விசேட அனுமதித் தேர்வு 16-11-2000 அன்று பி.ப. 1-30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் ஏற்கனவே எம்மால் அனுப்பப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

- பதிவாளர்

13 - 11 - 2000

(சி-13827)


# பண்டாரவளைச் சம்பவம்: ஐ.நா. செயலருக்கு மகஜர்

திருகோணமலை, நவ. 15

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களைக் கண்டித்தும், சம்பவங்கள் தொடர்பாகப் பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரியும் திருகோணமலைப் பிரதேச மக்கள் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர். சுமார் பதினையாயிரம் பேர் கையெழுத்திட்ட இந்த மகஜர் திருகோணமலையிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவலகப் பிரதம அதிகாரி அலெக்ஸாண்டர் மொால் ஏயிடம் கடந்த ஞாயிறன்று மாலை கையளிக்கப்பட்டது.

மகஜரை ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு அனுப்புவதற்கு உடனடியாகத் தாம் ஏற்பாடுகளை மேற்கொள்வதாக அலெக்ஸாண்டர் மொால் ஏ உறுதியளித்தார்.

(இ-8)


# காணவில்லை

எனக்குச் சொந்தமான மருன் (Marron) நிறமுடைய K.M W. மோட்டார் சைக்கிளை (இல. 500 -6341) 13-11-2000 திங்கள் மாலை முதல் காணவில்லை. தகவல் அறிந்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

கணேசன் சென்ரர்,
தாவடி வடக்கு,
தாவடி.

(சி/13835)



# பால் விலை அதிகரிப்பு

எமது சங்கம் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யும் பாலிற்கான விநியோகச் செலவுகள் அதிகரித்திருக்கும் காரணத்தால் 15 — 11 — 2000 ஆம் திகதியில் இருந்து ஒரு லீற்றருக்கான பாலின் விலை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பால் ரூபா 21/- இலிருந்து ரூபா 22/-
ஆடைநீக்கிய பால் ரூபா 13/-இலிருந்து ரூபா 14/-

இவ்விலை அதிகரிப்பினை ஏற்று எமக்கு ஒத்துழைப்பு நல்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொது முகாமையாளர்,
யாழ் மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/13832)



# பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம் வாக்காளர் இடாப்பு 2000

மேற்படி சங்கத்தின் 2000 ஆம் ஆண்டுக்கான கிளைக்குழுத் தேர்தலுக்கான வாக்காளர் இடாப்பு 31-08-2000 உடன் பூர்த்தி செய்யப்பட்டு சங்க அலுவலகத்திலும், தொழிற்படுகின்ற கிளை நிலையங்களிலும் அங்கத்தவர்களின் பார்வைக்காக இன்றிலிருந்து 30-11-2000 ஆம் திகதி வரை வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் இடாப்பில் தன் பெயரைப் பதிவதற்குத் தகுதி பெற்றுள்ள எவரேனும், வாக்காளர் இடாப்பில் தமது பெயர் சேர்க்கப்படாத பட்சத்தில் வாக்காளர் இடாப்பில் தனது பெயரைச் சேர்த்தல் பொருட்டும் —

அக் கிளையின், பெயர் பதிவு செய்யப்பெற்றுள்ள சங்க அங்கத்தவர்கள் எவரேனும் வாக்காளர் இடாப்பில் ஏதேனும் ஒரு பெயர் காணப்படுவது பற்றிய தமது ஆட்சேபனையையும்,

எழுத்து மூலம் 30-11-2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் மேன்முறையீடு செய்யலாம்.

ச. செல்வரத்தினம்
தலைவர்

இ. தங்கராசா
செயலாளர்

(சி/13825)



# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை

திருமதி இ. வேணுகாந்தன் அவர்களின்

அன்புத் தந்தையார்

**சோமசுந்தரம் செல்லத்துரை**

அவர்களின் மறைவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

(80547)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 — 03 — 1941

உதிர்வு 15 — 11 — 1996

## அமரர் இராசதுரை ஜெயகுணரத்தினம்

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறை
விடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
எம்முடன் நீங்கள் வாழ்ந்த காலங்கள்
எம் நினைவில் பசுமையாக உள்ளன.
ஆண்டு நான்கு சென்றாலும் உங்கள்
நினைவு எம்மை விட்டு அகலாது!

என்றும் உங்கள் நினைவுடன்
**மனைவி, பிள்ளைகள்.**

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை. (80507)

# 34 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 — 06 — 1917

மறைவு 13 — 10 — 2000

## அமரர் மாரிமுத்து கதிர்காமு

பாசத்தின் திருவுருவே!

நீங்கள் கணவனாய், தந்தையாய், மாமனாய், பேரனாய், பூட்டனாய் வாழ்ந்து எங்களையெல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்து 34 நாள்கள் சென்றாலும் உங்கள் நினைவு என்றும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

மிசன் பாடசாலை வீதி, கோண்டாவில். (80476)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1970 — 10 — 24

விண்ணில் 1995 — 11 — 11

கிரிமலையைச் சொந்த இடமாகக் கொண்ட

## செல்வன் தர்மலிங்கம் பாலச்சந்திரன்

**திதி: 15—11—2000**

குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஊருக்கு உத்தமனாய்
உறவினர்க்கு உறுதுணையாய் இருந்து
விண்ணுலகை நீயடைந்து
ஐந்தாண்டு சென்றதின்று.

நித்தம் நினைந்து நினைந்து சித்தம் கலங்குதையா!

பிரிவால் துயருறும்
**அம்மா, அப்பா,**
**தங்கை, தம்பி.**

தற்போதைய முகவரி:
கோப்பாய் தெற்கு.
கோப்பாய். (80417)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## நுண்கலைமாணி (இசை/நடனம்) விசேட அனுமதிச் செய்முறை/ நேர்முகப் பரீட்சைகள் 1999/2000

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்து இதுவரை செய்முறை / நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்கான விசேட அனுமதி செய்முறை / நேர்முகப் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் காலை 9 30 மணிக்கு நடைபெற உள்ளன.

**நுண்கலைமாணி (இசை) 15 11.2000**
**நுண்கலைமாணி (நடனம்) 16.11.2000**

இடம்:
**யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடம்**

இப்பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் ஏற்கனவே எம்மால் அனுப்பப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவாளர்
13—11—2000
(சி/13826)

---

யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
தரம் 1 செயற்பாட்டறைத்

## திறப்பு விழா

**இன்று (15-11-2000) புதன்கிழமை**
முற்பகல் 11.00 மணி

தலைவர்: எஸ். சண்முககுமார் (B A., Dip. in Edu )

பிரதம விருந்தினர்: திருமதி செ. மகாலிங்கம்
(யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்)

அன்புடன் அழைக்கும்:

(80502) **வித்தியாலய குடும்பம்**

---

## பிரிவுபசாரம்

### திரு. டானியல் ஆசீர்வாதம்

(முன்னாள் விருந்தினர் விடுதிக் காப்பாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)

யாழ் பல்கலைக்கழகத்தினதும், ஊழியர் சங்கத்தினதும் ஆரம்பகால உறுப்பினராகவிருந்து ஓய்வு பெற்ற **திரு. டா. ஆசீர்வாதம்** அவர்கள் இன்று கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் ஊழியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் கௌரவிக்கப்படுகிறார்.

அன்னாரின் ஓய்வு காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்!

**பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

(80514)

---

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பா. மு. நாகராசா

(முன்னாள் பிரபல வர்த்தகர்)

தோற்றம் 21 — 11 — 1912

மறைவு 03 — 11 — 1993

திதி: 15 - 11 - 2000

எமது குடும்பத் தலைவராய் விளங்கி
எமக்கெல்லாம் நல் வழிகாட்டி
நல்வாழ்வளித்த எமது அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

116, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (80513)

---

# ஊர்காவற்றுறைப் பிரதேச சபை
## சந்தைகள், கடைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்-2001

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01—01—2001 முதல் 31—12—2001 வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 28—11—2000 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே பிற்பகல் 2 00 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும் அத் தருணத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் 27—11—2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புப் பணம் கேள்விப் படிவக்கட்டணம் ஆகியவற்றைப் பணமாகச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம் மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விபரம் | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை இல. 01 (மாத வாடகை 150/- அறவிடப்படும்) | 100/- | 1000/- | 50000.00 |
| 02 | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை இல. 02 (மாத வாடகை 150/- அறவிடப்படும்) | 100/- | 1000/- | 50000.00 |
| 03. | நாரந்தனை மாட்டிறைச்சிக் கடை (கடையை தாங்களே அமைத்துக் கொள்ள வேண்டும்) | 100/- | 750/- | 35000.00 |
| 04 | ஊர்காவற்றுறை மீன் சந்தை | 100/- | 750/- | 35000.00 |
| 05. | நாரந்தனை மீன் சந்தை | 100/- | 250/- | 5000.00 |
| 06. | புளியங்கூடல் மீன் சந்தை | 100/- | 250/- | 2000.00 |
| 07. | ஊர்காவற்றுறை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 20000.00 |

**திரு. கு. கணேசலிங்கம்**
செயலாளர்,
ஊர்காவற்றுறைப் பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை.
10—11 2000

(சி/13795)

# உதயன்

## அலட்சியம் செய்யலாகாது

நாம் தங்க வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில், காவலர்களின் நடமாட்டங்கள் எமக்குச் சந்தேகத்தைத் தருகின்றன. விசாரணைக்கெனத் தனி அறைக்கு அழைக்கப்படும் தமிழ்க்கைதிகள் அங்கு வைத்துத் தாக்கப்படுகின்றனர், தற்போதைய நிலைமை நீடிக்குமானால் சிறைச்சாலைக்கு உள்ளேயே நாம் மடிந்து போக நேரிடும்—

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகள் அரசாங்கத்துக்கு அனுப்பிய மகஜரின் ஒரு பகுதி இது.

தம்மைச் சாவில் இருந்து காப்பாற்றுவதற்கு களுத்துறையில் இருந்து தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்குஅனுப்புமாறு கோரியே அரசுக்கு இந்த மகஜரை அவர்கள் எழுதியுள்ளார்கள்.

கைதிகளின் பாதுகாப்புக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு. இதனை நாம் மட்டும் சொல்லவில்லை. சர்வதேச சட்ட விதியும் அதுவே. ஆனால் அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் வழங்கும் பாதுகாப்பில் தமிழ்க் கைதிகள் நம்பிக்கை இழந்துவிட்டனர், சிறைச்சாலைப் பாதுகாப்பு என்பதன் அத்திவாரமே ஆட்டம் கண்டுவிட்டது.

பண்டாரவளை தடுப்பு (புனர்வாழ்வு) முகாமில் அண்மையில் நடைபெற்ற தமிழ் இளைஞர்களின் கொன்று குவிப்பின் பின்னர் தெனிலங்கைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகளுக்கு இந்த அச்சம் வருவது இயற்கையே.

பண்டாரவளைச் சம்பவத்தைச் சந்தர்ப்பமாக்கித் தமிழ்க் கைதிகள் அதனைத் தமக்குச் சாதமாக்க முனைகிறார்கள் என்று இது குறித்து விதண்டாவாதக் கருத்தைத் தெரிவிக்கக் கூடியவர்களே! அரச அதிகாரிகளே! தமது பலவீனத்தை — தமிழ்க் கைதிகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்க இயலாத பலவீனத்தை — மூடி மறைப்பதற்காக களுத்துறைக் கைதிகளின் கோரிக்கையை அரசு அலட்சியம் செய்யலாம்.

தமிழ்ப் பிரதேசச் சிறைச்சாலைகளுக்கு அவர்களை மாற்றினால் இலகுவில் தப்பி ஓடி விடுவார்கள் என்று கூட அரசும், அதிகாரிகளும் கற்பிதம் செய்யக்கூடும்.

1983 இல் வெலிக்கடைச் சிறைச்சாலைக் கொடிய குரூரம் போன்று பண்டாரவளையில் தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட பின்னர் அரசாங்கத்தின் மேற்கண்ட வாதங்களும், நியாயங்களும், கற்பிதங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல.

தமது உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்று தெரிவித்த பின்னரும் களுத்துறைத் தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு தவறுமானால் பண்டாரவளைக் கொடுமை போன்றவற்றுக்கு அரசாங்கமும் உடந்தை என்றாகிவிடும்.

கைதிகளின் பாதுகாப்புக்கும் அவர்களின் நலன்களுக்கும் பொறுப்பான சிறைச்சாலை அதிகாரிகளும் பாதுகாவலர்களும் வேலியே பயிரை மேய்வது போல நடந்து கொள்வதாக முடியும்.

''சந்தேகத்தின் பேரில்'' என்ற முத்திரையுடன் கைது செய்யப்பட்டு விசாரணையோ, சட்ட நடவடிக்கையோ இன்றி மனிதாபிமானமற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் இளைஞர்களை உடன் விடுதலை செய்வதே எல்லாப் பிரச்சினைகளுக்கும் சித்திக்கும் மருந்தாக அமையும். பதவியேற்ற புதிதில் இது குறித்துக் கால அட்டவணை வகுத்த நீதி அமைச்சர் இதனைக் காதில் போட்டுக் கொள்வாரா?

# ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் வீதி அபிவிருத்தித் திட்டங்கள்

## ஜனாதிபதியின் அனுமதியை டக்ளஸ் பெறுவார்

கொழும்பு, நவ. 15

வடக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் வீதி அபிவிருத்தி மற்றும் அடிப்படை வசதிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக வடமாகாண அபிவிருத்தி மீள் குடியமர்வு புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாவட்டங்களின் அரச அதிபர்களுடன் நடத்திய பேச்சுக்களின்போது அமைச்சர் வன்னி மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கு இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டப்பட்ட விடையங்கள் வருமாறு:–

பாதுகாப்பு அமைச்சர் என்றவகையில் இதற்கான அங்கிகாரம் ஜனாதிபதியிடம் கோரப்பட உள்ளது. இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளக்கூடாது என ஜனாதிபதியோ பாதுகாப்பு அமைச்சரோ எழுத்து மூலமான பணிப்புரை எதையும் வழங்கவில்லை.

★ இந்த வருடம் முல்லைத்திவு மாவட்டத்தில் படை நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பொதுமக்களுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை. இது குறித்து உரிய அதிகாரசபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோதும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படவில்லை.

★ உலக வங்கியின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கிழ் வன்னி மாவட்டங்களில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த அரசு தயாராக உள்ளபோதும் அப்பகுதிப் படை அதிகாரிகளின் முன் அனுமதி கிடைக்காத காரணத்தால் அவை நீண்ட காலமாகத் தடைப்பட்டுள்ளன. (இ-8)

# தொடர்ந்து பணியாற்ற முடியாத ஊழியருக்கு கருணைத் தொகை

## போக்குவரத்துச்சபை முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் தொடர்ந்து சேவையாற்ற முடியாத அளவுக்கு நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் கருணை அடிப்படையிலான உதவு தொகை பெற விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பாரிசவாத நோய், இருதய நோய், புற்றுநோய், சிறு நீரகம் பாதிக்கப்பட்டவர்கள், கண் பார்வையை இழந்திருப்பவர்கள், கை, கால்களை இழந்திருப்பவர்கள் ஆகியோர் மேற்படி உதவு தொகையைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கலாம்.

இத்தகைய ஊழியர்கள் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் போக்குவரத்துச் சபையில் நிரந்தர சேவையாற்றி இருக்கவேண்டும்.

தொடர்ந்து சேவையாற்ற முடியாத நோய்களால பாதிக்கப்பட்ட ஊழியர்கள் எவராவது இருந்தால் அவர்கள் அந்தந்தப்பகுதித் தலைவர்களுக்கூடாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் அவர்களுக்கு உதவு தொகையாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஜ-6)

# தேசியக்கல்வி நிறுவகம் நடத்தும் கணனிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 15

தேசியக் கல்வி நிறுவகம் நடத்தும் கணனிப்பிரயோகத்துக்கான தேசிய சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஜூன் மாதம் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெற்ற மேற்படிபரீட்சை குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இங்கு நடைபெறவில்லை.

இதனைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரியின் மகேஸ்வரி கணனி வள ஆய்வு நிறுவனத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து யாழ். இந்துக்கல்லூரி மற்றும் யாழ். இந்து மகளிர் கல்லூரிகளில் இந்தப் பரீட்சைகள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் —

பரீட்சை தொடர்பான வினாத்தாள்களையும் ஆவணங்களையும் கொழும்பில் தற்போது தங்கியுள்ள மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் த. தணிகாசலம் பிள்ளை எடுத்து வருவார் எனவும் — யாழ் மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை தெரிவித்தார்

## கொடுப்பனவு

நல்லூர், நவ. 15

நல்லூர் பிரதேச செயலகப் பகுதிக்கு உட்பட்ட அரசாங்க உதவி நன்கொடைப் பணம் பெறுபவர்கள் தமக்குரிய கொடுப்பனவுகளை எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளுமாறு ஆனைப்பந்தி உதவி அஞ்சலக அதிபர் கேட்டுள்ளார்.

(இ-111)

## தொழில் அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். ஸ்ரான்லி வீதி, சிறாமபியடி ஒழுங்கையில் உள்ள கட்டடத்தில இயங்கி வந்த யாழ்ப்பாண மாவட்ட தொழில் அலுவலகம் கடந்த முதலாம் திகதி முதல் காங்கேசன்துறை வீதியில் உள்ள வீரசிங்கம் கட்டடத்தின் 4 ஆம் மாடியில் இயங்கி வருகின்றது.

ஏற்கனவே அலுவலகம் இயங்கி வந்த இடத்தில் அடிப்படை வசதிகள் போதியளவின் இல்லாமையால் அலுவலகம் புதிய இடத்துக்கு மாற்றப் பட்டிருப்பதாக உதவித் தொழில் ஆணையாளர் தெரிவித்தார்.

(ஜ

## நாளை

கார்த்திகை 1

வியாழக்கிழமை

திதி: பஞ்சமி

மாலை 06.12 வரை.

நட்சத்திரம்: புனர்பூசம்

முன்இரவு 11.15 வரை.

கரிநாள்

சுபநேரம்: 7.38— 09.08

இராகுகாலம்: 1.38 – 3.08

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## உதயவாக்கு

உண்மையும், நேர்மையும் ஒருவனை எந்த நாடு வழியாகவும் அழைத்துச் செல்லும்.

- ஜெர்மனிப்பழமொழி

## விவசாய தொழில்நுட்ப பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் விவசாயம் கற்கும் மாணவர்களது நன்மையைக் கருத்திற் கொண்டு விவசாயத் தொழில் நுட்பம் சார்ந்த அறிவுரை வகுப்புகளும் செய்முறைப் பயிற்சிகளும் நடத்தப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தை உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் நடை முறைப் படுத்தவுள்ளது. இதன் முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 11 பாடசாலைகளில் மேற்படி வகுப்புகள் நடத்தப் படவுள்ளன.

(ஜ-6)

## பயிற்சிநெறி பூர்த்தி

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து தாதிய முகாமைத்துவப் பயிற்சி நெறிக்கு கொழும்பு சென்ற தாதிய உத்தியோகத்தர்கள் அப்பயிற்சி நெறியை முடித்துக் கொண்டு மீண்டும் தம் பணிக்கு திரும்பியுள்ளனர்.

சேவைமூப்பு அடிப்படையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் இப்பயிற்சி நெறிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து எட்டு தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

[இ]

## குடிதண்ணீர் விநியோகம்

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன அனுசரணையில், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் இரு கிராமங்களுக்கு குமாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது.

கப்புது, அந்தணத்திடல் ஆகிய இரு கிராமங்களுக்கே குடி தண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ-100)

## வாராந்த நிகழ்வு

நெல்லியடி, நவ. 15

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கே. கிருபா, தவதாசன் ஆகியோரின் பக்திப்பாடல்கள் பக்கவாத்தியங்களுடன் இடம்பெறும்.

இந் நிகழ்வுக்கான அறிமுக வுரையை கு. அருணகிரிநாதன் நிகழ்த்துவார்.

ஜ-173-30)

## திருட்டு

கலிகைச் சந்தியில இயங்கி வந்த இராணுவ முகாம் தற்பொழுது மூடப்பட்டதையடுத்து அங்கு செல்லும் அயலவர்கள் வீடுகளிலுள்ள ஓடு முதல் கதவு வரையிலான உடைமைகளைத் திருடுவது தினமும் இடம்பெறுகிறது.

[இ-109]

# மருந்தகக் கட்டட புனரமைப்பு நிதி திருப்பி அனுப்பப்பட்டது

பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்திருந்த மத்திய மருந்தகக் கட்டடத்தை புனரமைக்க பருத்தித்துறை நகரசபை மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை

இதற்கென ஒதுக்கிய 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மருந்தகக் கட்டடத்தை பருத்தித்துறை நகரசபை புனரமைப்புச் செய்வதாயின், அக்காணியை 50 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் தமமிடம் ஒப்படைக்குமாறு யாழ் பிராந்திய பிரதி சுகாதார மாகாணப் பணிப்பாளர் கோரியிருந்தார். (இ 109)

## மாநகரசபை குண்டு வெடிப்பு

# ரணிலுக்கு புலிகளுடன் தொடர்பு கிடையாது எனத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 15

கொழும்பு மாநகரசபை வளாக குண்டு வெடிப்பில் விடுதலைப் புலிகளுடன் ரணில் தொடர்பு கொண்டிருந்ததற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது என்று இரகசியப் பொலீஸார் கொழும்பு தலைமை நீதிபதியிடம் தெரிவித்தனர்.

மாநகரசபைக் கட்டட குண்டு வெடிப்புக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பிருக்கிறது என்ற பொருள்பட ரூபவாஹினி நிகழ்ச்சியில் கூறப்பட்டதை அடுத்து நீதிபதி இது குறித்து விசாரிக்கும்படி பணித்திருந்தார்.

நீதிமன்ற ஆணையின்படி விசாரணை நடத்திய பொலீஸ் அத்தியட்சகர் சமரதுங்கா குண்டு வெடிப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவரவில்லை என்று நீதிமன்றில் தெரிவித்தார். (இ-ஒ)

## கலந்துரையாடல்

குருநகர், நவ. 15

சீநோர் தொழிலாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சீநோர் தொழிற்சாலையில் சேவை புரிந்து நஷ்டஈடு பெற்றுக் கொண்ட அனைத்து தொழிலாளர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு சீநோர் தொழிலாளர் அபிவிருத்திச் சபை செயலாளர் கேட்டுள்ளார்.

(இ-51)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மெத்தையோடுகூடிய கட்டில்கள், அலுமாரிகள், தையல்மெசின்கள்(சிங்கர்), கதிரைகள், செற்றி, ஸ்பிறிங்கட்டில், **Dressing Table**, சோகேஸ், எவர்சில்வர் பாத்திரங்கள், டினர்செற், கிடாரங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. காலை 11 மணிக்கு முன்பு சந்திக்கவும். செ.தனபாலசிங்கம், 179/3, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (80458)

முப்பதுநாள நிரம்பிய (கறுப்புநிற) அல்சேஷின் நாய்க்குட்டிகளும், தாய் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மார்க்கண்டு, M.S.T. லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (80478)

### உடன் விற்பனைக்கு

புதிய (China) வயலின்,கோழிக்குஞ்சு பொரிக்கும் சாதனம், **England** வில்லியஸ் 12 வாட்டப்பம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.திருக்குமரன் (வீணாவேணு), வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (80447)

### நாய்க்குட்டி விற்பனை

**Alsation** நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80518)

### இலக்கியக் கட்டுரைகள்

10-11ஆந் தரங்களில் தமிழ இலக்கிய பாடத்தைக் கற்கவும், கற்பிக்கவும் உதவும் 38 கட்டுரைகள், 325 நாடகங்களும், 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இலக்கிய விமர்சன நூல். (80503)

### தொடர்பு கொள்ளவும்

கோகிலாக்கண்டி கைதடியைச் சேர்ந்த சின்னையா ரட்ணம் என்பவர் உடன் தொடர்பு கொள்ளவும். தபால் மூலமோ அல்லது நேரிலோ தயவு செய்து சந்திக்கவும். தொடர்பு: தி.திருக்குமரன் (வீணாவேணு), வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.(80448)

### இறைச்சிக்கோழி தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80517)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி கல்பேட் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம் தொடர்புக்கு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர்வளவு). (80292)

### மணமக்கள் தேவை

யாழ்.இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த 40 வயதுடைய மணமகனுக்கும் (விரிவுரையாளர்) 30வயதுடைய அவர் சகோதரிக்கும் தகுந்த மணமக்களை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு. விளம்பர இல.1138, மே/பா உதயன். (80499)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக கொடுக்கப்படும் (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3081 (c/13637)

### திருமணசேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (80534)

### தவறிவிட்டது

மிருசுவில் விடத்தற்பளையைச் சேர்ந்த சி.கைலாயபிள்ளை என்பவருடைய விசேட அ.அட்டை (இல.091 031539) வடமராட்சி உடுப்பிட்டி சந்திப் பகுதியில் கடந்த 03.11.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடுப்பிட்டி உப.தபாலகத்தில் ஒப்படைத்து உதவுமாறு வேண்டப்படுகின்றனர். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (தேசிய அ.அ.இல. 3604309 28v) தற்போதைய முகவரி: சி.கைலாயபிள்ளை, வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டிகிழக்கு. (c/13829)

---

உ

'சாமியே சரணம் ஐயப்பா'

## அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

நடத்தும்

## 18 ஆவது ஆண்டு நிறைவு
## மகரஜோதிப் பெருவிழா

கொழும்பு - 13 ஸ்ரீ தம்பையா சத்திரம்
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில்
சர்வதேச இந்துமத குருபீடத் தலைவர்
'ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி - சபரிமலைக் குருமணி'
**'சிவாகம கலாநிதி' ஸ்ரீஜயப்பதாஸன்**
**சாம்பசிவ சிவாச்சாரியார்** அவர்கள்
(தலைவர் இலங்கை பிராம்மண சமாஜம்)

**தலைமையில்** கார்த்திகை முதலாம் திகதி **16-11-2000** வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் **மஹா கணபத ஹோமத்துடன்** சபரிமலைப் புனித யாத்திரை செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு விரத முத்திரை மாலை அணிவிக்கப்படும்.

**16-11-2000 முதல் 05-01-2001 வரை**
**மகரஜோதிப் பெருவிழா நடைபெறும்.**

'சாமியே சரணம் ஐயப்பா'
**சர்வதேச இந்துமத குருபீடம்**
**யாழ்/மாவட்ட அமைப்பாளர்கள்.**

சிவஸ்ரீ
சிவ. நித்தியானந்தக குருக்கள்
*சங்கானை.*

பிரம்மஸ்ரீ
மு.நாகேந்திரசர்மா
*மல்லாகம்.*

(C/13828)

---

## ஆறு திங்களின் நினைவாக



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 | 15 |
| 12 | 05 |
| 1960 | 2000 |

### அமரர் மனவல் புஸ்பராசா இமானுவேல்

**கதிரவன் எழுமுன்னே களங்கட்டி வலையுடன்**

புஸ்பராசா பாடென்றால் பொன்விளையும் பூமி என்பார்.
உன்மனது தொட்டாரை செல்லநாமம் சூட்டிடுவாய்!
ஆறு திங்கள் சென்றதைய ஆதவனைக் காணவில்லை.
மனைவி, மக்கள் புலம்புகிறார் உறவினரோ ஓயவில்லை!
உன்னான்மா சாந்திபெற திருப்பலியில் கூடுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி - அனா**
**பிள்ளைகள் - றொபைறோ, வீஜின்.**

*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.*

(80529)

---

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 15 |
| 12 | 11 |
| 1914 | 1992 |

### பண்டிதர் மு.க.க. அருட்பிரகாசம்

(இளைப்பாறிய அதிபர்)

எட்டாம் ஆண்டிலும் நாம் ஏங்கித் தவிக்கிறோம்
எம் இல்ல ஒளி ஓடி மறைந்த தினமின்று
ஆவலுடன் அழகாக அன்று அமைத்த மனைதனில்
அன்புடனே அனைவரும் நாம் வாழ்ந்து மகிழலாம்
என்று சொல்லி அரவணைத்தீர் அந்நாளில் எம்மை
எங்கிருப்போம் இப்போது என்று புலம்பி நாம்
ஏந்தலையே வேண்டுகிறோம் ஐயாவே எமக்காக!

அன்புடன் நினைவு கூரும்:
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**சகோதரர், பேரப்பிள்ளைகள்.**

*'எமிலகம்'*
*வளன்புரம், கொழும்புத்துறை.* (80503)

---

## ஓராண்டு நினைவலைகள்



### திருமதி புவனேஸ்வரி ஞானப்பிரகாசம்

(இளைப்பாறிய ஆசிரியை)

தோற்றம்: 27-10-1940
மறைவு: 28-10-1999

*திதி: 15-11-2000*

**ஐயிரு திங்கள் எங்களைச் சுமந்து**
**அன்பினைச் சொரிந்து ஆளாக்கிய அன்னையே!**
**ஆண்டொன்று ஓடி மறைந்ததம்மா**
**அவனியில் நாம்படும் பாடு அறிவாயோ அம்மா?**

*அம்மாவின் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

**- குடும்பத்தினர்.**

(80332)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 16 |
| 08 | 10 |
| 1946 | 2000 |

### திருமதி
### தையல்நாகேஸ்வரி அரியநாயகம்

(தாதிய உத்தியோகத்தர் -
யாழ். போதனா வைத்தியசாலை)

**அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்**
**பாசப்பிணைப்புடனே நீ இருந்தாய்**
**துன்பம் பல வந்த போதும் துணிவுடனே**
**தூய பணி நீ செய்து வாழ்ந்தாய்**
**இன்பம் பல பெற்று உலகுயர வேண்டுமெனும்**
**உயர்வான சிந்தையுடன் வாழ்ந்தவளே!**
**அன்பும் உரியார் பிறர்க்கென்ற வள்ளுவனின்**
**ஈடில்லா இலட்சியத்தில் நீ வாழ்ந்தாய்!**

எங்கள் குடும்பத் தலைவி நோயுற்றிருந்த வேளை இன்முகத்துடன் சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் -

2000-10-16 அன்று மரணச் செய்தி கேட்டதும் உடன் விரைந்து உதவிய யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்தியர்கள், தாதிய உத்தியோக ஊழியர்களுக்கும் -

மரணச் சடங்கின் போது நேரில் சமுகம் தந்து துன்ப துயரங்களில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், பணிப்பாளர்கள், ஊழியர்கள், கே.சீ.சீ விளையாட்டுக் கழக உறுப்பினர்களுக்கும் -

உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் எம்முடன் துயர் பகிர்ந்தோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், பத்திரிகை - துண்டுப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி வெளியிட்டோருக்கும் -

2000-11-13 அன்று வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது மனங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் இன்று (2000.11.15) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்த சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**க. அரியநாயகம்** (கணவன்)
**சுவேந்தன்** (மகன்)
**கோசலா** (மகள்)
**கோகுலா** (மகள்)
**இளையதம்பி திரவியம்** (தாய்)

*191, காதி அபூபக்கர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்) (80533)

### கலைப்பீட மாணவி மீது 'ராகிங்' கொடூரம்

# துவாயால் வாயை அழுத்தியவாறு குளறாதே என என்னை மிரட்டினர்!

## ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் விவரிப்பு

நெல்லியடி,நவ.15

"கதவைத் திறந்து கொண்டு உட்புகுந்த மாணவிகள் சிலர், எனது கழுத்தில் போர்த்திருந்த துவாயைப் பறித்தெடுத்து என் வாயை அதனால் அழுத்திப் பிடித்து 'குளறாதே குளறாதே' என மிரட் டினர்"

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு திருநெல்வேலிப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து, கலைப் பிரிவு சிரேஷ்ட மாணவிகளால் "ராகிங்" கொடுமைக்கு உள்ளாகி வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பிரிவு மாணவியான லோகநாதன் ரதிதேவி (வயது 21) தெரிவித்தார்.

வடமராட்சியைச் சேர்ந்த பயந்த சுபாவத்துடன் காணப்பட்ட இந்த மாணவி, தனக்கு நேர்ந்த ராகிங் கொடூரம் பற்றி, வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் வைத்து 'உதயன்' செய்தியாளருக்கு தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றின் விடுதியில் மேல் மாடியில் நான் தங்கி இருந்து படித்து வந்தேன்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நான்"ரியூட்" எழுதிக்கொண்டிருந்த போது, சுமார் 8.15 மணியிருக்கும். யாரோ கதவில் தட்டும் சத்தம் கேட்டது. நான் அதனைப் பொருட்படுத்தவில்லை.

சில நிமிடநேரத்தில் அங்கு உட்புகுந்த 3 ஆம் வருட கலைப் பிரிவு மாணவிகள் 6 பேர் என்னை நெருங்கி வந்தார்கள். கதவில் தட்டியது யார் என்று கேட்டேன். நாங்கள் தட்டவில்லை என்று மறுத்தனர். பின்னர், அங்கிருந்த எனது புத்தகங்களை எடுத்து உறைகளையும், மட்டைகளையும் கிழித்தனர். நான் கையில் கட்டியிருந்த மணிக்கூட்டை பிளேற்றினால் வெட்டினார்கள். (காயம் எதுவும் காணப்படவில்லை)

இந்நிலையில் எனக்கு மிக நெருக்கமாக வந்த இரு மாணவிகள், நான் கழுத்தில் போர்த்தியிருந்த துவாயைப் பறித்து எடுத்து, என் வாயை அழுத்திப்பிடித்து, 'குளறாதே குளறாதே' என எச்சரிக்கை செய்தனர்.

இக் கொடுமையில் ஈடுபட்டவர்கள் எனது விடுதியின் கீழ்த்தளத்தில் இருந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும்.

செவ்வாய் இரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. அழுதபடியே பொழுதைக் கழித்தேன். மறுநாளாகிய புதன்கிழமை, இச்சம்பவம் குறித்து யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துறைத் தலைவர் என்.நடராசசுந்தரத்திடம் எழுத்து மூலம் புகாரிட்டேன்.

எனக்கு கல்வி தேவையில்லை. பெற்றோர் தான் இந்நிலையில் முக்கியம் என்பதை உணர்ந்த நான், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து வடமராட்சிக்கு பயணத்தை மேற்கொண்டேன்.வழியில் கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் அந்த மினிபஸ் பழுதுபட்டு நின்று விட்டது. என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை கால்போன போக்கில் இராச வீதி ஊடாக நடந்து சென்றேன். சைக்கிளில் வந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் என்னை தனது சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பல்கலைக்கழகம் நோக்கிச் சென்றார். செல்லும் போது வழியில் ஒரு தேநீர்க்கடையில் தேநீரும் வாங்கித் தந்து விட்டு அவ்விடத்திலேயே என்னை இறக்கிவிட்டுச் சென்றார்.

நேரம் மாலையாகிவிட்டது. எனவே நான் நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள தெரிந்தவர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று நடந்தவற்றைக் கூறினேன். அவர்கள் அங்கு என்னைத் தங்க வைத்தனர்.

பின்னர் மறுநாள் வியாழனன்று, வடமராட்சியிலுள்ள எனது பெற்றோருக்கு அவர்கள் தொலைபேசியில் கூறிய தகவலையடுத்து, அங்கு வந்த எனது பெற்றோர் என்னைமீட்டு வடமராட்சிக்கு கூட்டி வந்தனர்.மறுநாள் வெள்ளி காலை, வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன் - என்று தெரிவித்தார். (ஐ-109-6)

### நுண்கலைப்பீட அனுமதி:

# தோற்றத் தவறியவர்களுக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை

## இன்றும், நாளையும் இடம்பெறும்

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்திற்கு அனுமதிக்கடிதங்களை பெற்றும் வன்னியில இருந்து வரப் பிந்திய மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளதாக பதிவாளர் தெரிவித்தார்.

நடனம், சங்கீதத்துறை, சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய துறைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காத அனைத்து மாணவர்களையும் இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நடனம், சங்கீதம் ஆகிய துறைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றும் நாளையும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

சித்திரமும் வடிவமைப்பும் என்ற கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.

வன்னிப்பகுதியில் இருந்து மாணவர்கள் வரப்பிந்தியதால் அவர்களின் நன்மை கருதி இந்தப் பரீட்சைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன எனவும்-

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தும் இதுவரை பரீட்சைக்கு தோற்றாதவர்களில் நடனத்துறையில் 22 மாணவர்களும் சங்கீதத்துறையில் 16 மாணவர்களும் சித்திரமும் வடிவமைப்பும் என்ற துறையில் 40 மாணவர்களும் தோற்றவுள்ளனர் எனவும் யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார். (இ-6)

# தமிழ்ச்சிறுமிக்கு சூடேற்றிய கத்தியால் குறிவைத்துச் சித்திரவதை செய்தாராம்!

## பொ.ஐ.முன்னணி எம்.பியின் மகள் மீது வழக்கு

கொழும்பு,நவ.15

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மகள் தாம் வேலைக்கமர்த்திய தமிழ்ச் சிறுமியை சூடேற்றிய கத்தியால் சித்திரவதை செய்ததாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரான சுராங்கனி எல்லாவலவின் மகளான வாயா விசாகா வீரசிங்க மீதே இந்தக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மாலா என அழைக்கப்படும் நிரோசா இராமலிங்கம் (வயது 15) என்ற சிறுமி அளித்த சாட்சியத்திலேயே இந்த விவகாரம் தெரிவிக்கப்பட்டது.

அந்தச் சிறுமியின் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பத்து வயதில் இருந்து இவரது வீட்டில் பணிப்பெண்ணாக இருந்து வருகிறேன் எனக்குத் தரப்பட்ட வேலைகளை சரியாகச் செய்து வந்தேன்.

சில சமயங்களில் சிறு சிறு பிழைகள் விட்டால் அறைக்குள் பூட்டி வைத்து பெல்ட், தடிகள் ஆகியவற்றால் அடிப்பார். சிலசமயங்களில் எனது தலைமயிரைப் பிடித்து சுவருடன் தலையை மோதுவார்.

கத்தியை நெருப்புக்குள் சூடு காட்டி அதனால் எனக்கு குறிவைப்பார். இருதடவைகள் இவ்வாறு செய்துள்ளார்.

சித்திரவதை தாங்க முடியாது அங்கிருந்து தப்பமுயன்ற போது, தன்னுடைய நகைகளை களவாடியதாக என்னைப் பொலிஸில் ஒப்படைத்தார்.

எதிரிமட்டுமல்ல அவரது தாயாரான சுராங்கனி எல்லாவலவும் சிலசமயங்களில் என்னைத் தாக்கியுள்ளார்.

இப்படி அந்தச் சிறுமி சாட்சியத்தில் கூறினார். (இ-3)

### யாழ்.தபாலகம் ஊடாக

# வீடியோ அனுப்பும் பணி மீண்டும் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.பிரதம தபாலகத்தில் உள்நாடு மற்றும் வெளியிடங்களுக்கு வீடியோநாடாக்களை அனுப்பும் பணி மீண்டும் இன்று புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12மணிவரை பொதுமக்களிடமிருந்து வீடியோ நாடாக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# ஆசிரிய கலாசாலை பரீட்சை அடுத்த மாதம் 29ஆம் திகதி!

காரைநகர்,நவ.15

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் இறுதிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு நாள்கள் நடைபெற உள்ளன.

கோப்பாய், பலாலி ஆகிய இரு கலாசாலைகளில் இந்தப் பரீட்சை நடத்தப்பட உள்ளது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து 216பேரும்-

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து 240 பேரும் - இந்த இறுதிப் பரீட்சையில் தோற்ற உள்ளனர்.

இந்தப் பரீட்சைகள் முடிவடைந்ததும் ஆசிரிய மாணவர்களை புதிய பாடசாலைகளில் நியமிப்பதற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (இ-73)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை அதிபர்

**உயர்திரு. செ.அன்ரன் செல்வக்குமார்**

அவர்கள் இலங்கை அதிபர்கள் சேவை தரம் I க்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் மேலும் கல்வியுலகில் பற்பல உயர் பதவிகள் பெற்று பகலோனாய் ஒளி பரப்பி பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக நீடூழி வாழ இறைவன் நல்லாசிகள் வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யா/மயிலிட்டி றோ.க.த. பாடசாலை (மானிப்பாய்)**

(80557) **ஆசிரியர்கள், ஊழியர், மாணவர்கள்.**



## இதய அஞ்சலி

எமது நிறுவன விஞ்ஞான ஆசிரியர்

இரா. அருட்செல்வத்தின் தாயார்

**திருமதி இ.இரத்தினம் (ஆச்சி)**

13-11-2000 அன்று காலமானார். அமரரின் பிரிவால் துயருறும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

நியூட்டன் அக்கடமி

(80558)


# வடமராட்சி கல்வி வலயத்தில் பரீட்சைச் சபை அமைப்பு

வடமராட்சி,நவ.15

வடமராட்சி கல்வி வலயத்தில் பரீட்சைச் சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சபையின் தலைவராக வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசாவும் செயலாளராக புலோலி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் பா.இரகுநாதனும், பொருளாளராக கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

தரம் 3இல் இருந்து தரம் 11வரையான வகுப்புகளுக்கு ஆண்டிறுதிப் பரீட்சை நடத்துவதற்கு இச்சபை அனுமதியைப் பெற்றுள்ளது. இதற்கமைய இம்மாதம் 29ஆம் திகதி முதல் பரீட்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தரம்9க்கு மாவட்ட மட்டத்தில் பரீட்சை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

## ஆலய புனரமைப்புக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,நவ.15

அராலி தெற்கு களவத்துறை ஞான வைரவர் ஆலயப்புனரமைப்புப் பணிக்காக வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருலட்சம்ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்தப் புனரமைப்புப் பணிக்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் அடிக்கல்லை நட்டார். (இ-3)

## சிறுமி காயம்

நெல்லியடி,நவ.15

மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுமி ஒருத்தி படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் துன்னாலை வேம்படியில் இடம் பெற்றது.

நாவற்குழியிலிருந்து இடம்பெயர்ந்து துன்னாலை வேம்படியில் வசித்து வரும், ஜெயந்தீபன் - ஜெசிந்தினி (வயது4) என்பவரே காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-109)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.15

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் "வணிக தீபம்" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை முற்பகல் பத்து மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடாதிபதி ம.நடராஜசுந்தரம் கலந்து கொள்வார். (இ-10)

## மரண அறிவித்தல்கள்

### முருகர் சிவராசா

வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் சிவராசா நேற்று (14.11.2000) அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் முருகர் - காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வீரசிங்கம் - பாறிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் இராசம்மாவின் பாசமிகு கணவரும் தாட்சாயினி(யா/வரணி ம.வி.), கார்த்தியாயினி(யா/வரணி ம.வி.), தர்மினி(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), துவாரகன்(யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.) ஆகியோரின் அருமைத் தந்தையும் கனகசிங்கம்(முரசுமோட்டை), இராசநாயகம் (பொலீஸ் உத்தியோகத்தர், வவுனியா), பாலசுப்பிரமணியம்(டோகா), செல்வராசா(டோகா), ரூபாவதி, பிறேமாவதி, கமலாவதி, நவரத்தினராசா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியம், சுவர்ணமாலினி, செல்வநாயகி, மகேஸ்வரி, சிவராசா, செல்லத்துரை, சற்குணநாதன், அருட்செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.11.2000) முற்பகல் 11.00 மணியளவில் தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:-
*சாமி அரசடி ஒழுங்கை,*
*கரவெட்டி வடக்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
சி.ஏகாம்பரநாதன் (தம்பி),
வரணி, இயற்றாலை.

(C/13838)

### செல்லையா இராசையா

(புகையிலை வியாபாரி)

தாவடி வடக்கைச் சேர்ந்த செல்லையா இராசையா நேற்று (14.11.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் புதல்வனும், சிவபாக்கியமலரின் அன்புக் கணவரும், நேசகுமார் (சோதி-மது வரித் திணைக்களம்) அவர்களின் தகப்பனாரும், சாந்தினிதேவியின் மாமனாரும், சைலா, லாவண்யன், யுவேந்திரா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், இராசம்மா, நாகரத்தினம்மா ஆகியோரின் அன்புத் தம்பியும் சிவக்கொழுந்து, ஆறுமுகம், சோமசுந்தரம், சுப்பிரமணியம் ஆகியோரின் அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2000) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் இடம்பெறும்.

தாவடி வடக்கு,
தாவடி.

தகவல் :
இ.நேசகுமார் (சோதி - மகன்)
மதுவரித் திணைக்களம்

(C/13840)

# கடற்படையை நவீனமயப்படுத்த இந்தியா கூடுதல் உதவி வழங்கும்

கொழும்பு,நவ.15

இலங்கை கடற்படையை நவீன மயப்படுத்துவதற்கு இந்தியா கூடுதலான உதவிகளை வழங்கவிருக்கின்றது.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திஸேரா இந்திய கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சுசில் குமாரருடன் இந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.

இருதரப்பும் உடன்பாடு கண்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

❊ இலங்கைக்கடற்படையை நவீன மயப்படுத்துவதற்கு தேவையான உதவிகளை இந்தியா வழங்கும்.

❊ இலங்கைக் கடற்படைக்கு விமானம் தாங்கிக் கப்பல்களை இந்தியா விநியோகிக்கும்.

❊ கடற்படையில் விசேட விமானப்பிரிவு ஒன்றை உருவாக்க உதவிகளை இந்தியா வழங்கும்.

❊ பாக்குநீரிணைச் சந்தியில் இந்திய - இலங்கை கடற்படையினர் கூட்டு ரோந்தை மீண்டும் ஆரம்பித்தல்.

இலங்கைக் கடற்படைக்கு விடுதலைப்புலிகள் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதை அடுத்து இந்தியாவிடம் இலங்கை உதவிகோரியுள்ளது என்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர். (இ-3)

# ஐ.தே.கட்சி எம்.பிக்கள் குழு விரைவில் யாழ்ப்பாணம் வரும்

கொழும்பு,நவ.15

யாழ்.மாவட்டத்தின் நிலைமைகளை நேரில் கண்டறிய ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையை அடுத்து அந்தக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்தக்குழு இங்கு வரவிருக்கின்றது.

பத்து உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் வகையில் இரு குழுக்கள் இவ்வருட இறுதிக்குள் இங்கு விஜயம் மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# பளை மற்றும் ஆனையிறவு பகுதியில் குண்டு வீச்சு

கொழும்பு,நவ.15

பளை மற்றும் ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது விமானப்படை நேற்றுக் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் நிலைகள் பல அழிக்கப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# நாடாளுமன்றப் பாதுகாப்புக்கு விசேட திட்டம் அமுலாகும்

நாடாளுமன்றத்தையும், அதற்குச் செல்லும் பாதைகளையும் பாதுகாக்க விசேட திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ள பிரதிச் சபாநாயகர் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க, பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் நேற்று ஆராய்ந்தார்.

புதிய திட்டம் குறித்த விவரம் வெளியாகாத போதும் - முப்படைகள் மற்றும் பொலீஸாரைக் கொண்ட விசேடபிரிவு ஒன்றை இந்தப்பணிக்கு நியமிப்பது என்றும்-

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொலீஸாருக்கு விசேட பயிற்சி வழங்குவது என்றும் - முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. (இ -3-8)

## துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபர் ஒருவர் யாழ்.நீதிமன்றினால் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இதே அணியைச சேர்ந்த சின்னத்தம்பி நவரட்ணராஜா உயிரிழந்தார். தற்செயலாக நடந்ததாகக் கூறப்படும இச்சம்பவம் தொடர்பாக இதே அணியைச் சேர்ந்த நாகமுத்து நாகேந்திரம் என்பவரே சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

சின்னத்தம்பி நவரட்ணராஜாவின மரணம் தொடர்பான விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றத்தில் நீதிவான் இத.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றபோது ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த வை.விக்னேஸ்வரன், வ.சிவநாதன், க.ரவிச்சந்திரன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

யாழ்.பொலீஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜெயலத் பண்டார இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவானிடம் கோரிக்கை விடுத்தார்.

சட்ட வைத்திய அதிகாரியின் சடல பரிசோதனை அறிக்கை வரும் வரை மரண விசாரணைத் தீர்ப்பை நீதிவான் ஒத்தி வைத்தார். (இ-5-10)

## வங்கியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் வந்து இந்தத் தாக்குதலை நடத்தியதாக காத்தான்குடிப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் குணரட்ணம் திருமால் (வயது20), முகமது றொயீஸ் (வயது 16) ஆகிய இரண்டு இளைஞர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகி மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7-21)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பகுதிகளும் கடலால் சூழப்பட்ட துறைமுகம் திருகோணமலைத் துறைமுகம். அதனை தம்வசமாக்கிக் கொள்ள வல்லரசு நாடுகள் பலவும் போட்டிபோட்டுக் கொண்டு இலங்கைக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்குகின்றன.

அப்படிப்பட்ட துறைமுகத்தைப் பலத்த பாதுகாப்புகளுடன் கடற்படையினர் காத்து வந்தனர். அதனை கடற்புலிகள் தாக்கியுள்ளனர்.

அந்தத் தாக்குதலின்போது புலிகள் அரசின் முப்படையினருடனும் சண்டையிட்டனர் - என்றார்.

இந்த நிகழ்வில் மூதூரில் இராணுவக்கட்டுப்பாடில்லாத பகுதியிலுள்ள பல மக்கள் கலந்து கொண்டனர். வெற்றிக் கோஷங்கள் மற்றும் பதாகைகளுடன் ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் கரும்புலிகளின் மாதிரிப் படகு ஊர்திகளும் காணப்பட்டன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (இ-8)

# பேசாலைக் கடலில் 31 அகதிகள் கைது

மன்னார்,நவ.15

விடத்தல்தீவிலிருந்து தமிழகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த 31 அகதிகள் பேசாலைக் கடற்பரப்பில் வைத்து நேற்று கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

பேசாலைக் கடலில் ரோந்து வந்த கடற்படையினர் இரு படகுகள் செல்வதை அவதானித்து இவர்களைக் கைதுசெய்தனர்.

கைதானவர்களில் 5 ஆண்களும், 10 பெண்களும், 16 குழந்தைகளும் அடங்குவர். மேல் விசாரணைக்காக இவர்கள் மன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## எழுதுமட்டுவாழ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலைப் படையினர் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல் மூலம் முறியடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் சாவகச்சேரியில் படையினரின் சினைப்பர் தாக்குதலில் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் அது அறிவித்துள்ளது. (இ-3)

## நீதிமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணித்திருந்தார்.

இந்த உத்தரவுகளுக்கு அமைய யாழ்சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலீஸாருடன் நேற்று அழைத்துச் செல்லப்பட்ட களஞ்சியப் பொறுபபாளர் இரு களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களை ப.நோ.கூ.சங்கங்களுக்கு விநியோகம் செய்தார்.

விநியோகம் முடிவடைந்த பின்னர் அவர் மீண்டும் யாழ்.சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதேநேரம் - உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொண்ட சில ப.நோ.கூ.சங்கங்கள் நேற்றே நிவாரண விநியோகத்தை ஆரம்பித்தன.

ஏனைய சங்கங்கள் இன்று விநியோகத்தை ஆரம்பிக்கவிருக்கின்றன. (இ-3-5-6-10)

## மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரியா பொ.பாலசுந்தரம்பிள்ளை உறுதியளித்துள்ளார்.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும் விசாரணை முடிவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் இச் சம்பவம் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் -

அவர் தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மாணவிகள் மீதான விசாரணை நேற்றுப் பலமணி நேரம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

(இந்தச் சம்பவம் தொடர்பான மற்றொரு செய்தி 9ஆம் பக்கத்தில்) (அ-7-6)

# மகேஸ்வரனுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க உத்தரவு

கொழும்பு,நவ.15

ஐ.தே.கட்சியின் ஒரேயொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான தியாகராசா மகேஸ்வரனுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கும்படி சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா, பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சந்திரானந்த டி சில்வாவைக் கேட்டுள்ளார்.

ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளை அடுத்து அனுரா இந்தக் கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் விடுத்துள்ளார்.

சமீபத்தில் மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகம் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையும் சபாநாயகர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தியாகராசா மகேஸ்வரனுக்கு காலதாமதமின்றி பாதுகாப்பை அதிகரிக்கும் படி அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-3-8)

# சிஹல உறுமய நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டம்

நோர்வேயின் மத்தியஸ்தம், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை அமைத்தல் ஆகியவற்றைக் கண்டித்து சிஹல உறுமய நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தவிருக்கின்றது.

விந்துனுவெவ முகாமில் இடம்பெற்ற சம்பவத்தின் எதிரொலியாக மலையகத்தில் சிங்கள மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைக கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறுகின்றது.

கொழும்பில் இடம்பெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பல மாவட்டங்களிலும் இருந்து ஏராளமானவர்கள் பங்குபற்றுவர் என அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.(இ-3)

# செஞ்.கப்பல் இன்று வரும்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் நோயாளர் கப்பல் சேவை இன்று இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறைக்கு இன்று வரும் கப்பலில் நோயாளர் எவரும் அழைத்துச் செல்லப்படமாட்டார்கள்.

யாழ்.ஆஸ்பத்திரிக்கான மருந்து வகைகள், தபால் பொதிகள் ஆகியன கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

## கொடிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதங்களின் போது தென்மராட்சி கிழக்கிலிருந்து பலர் இடம்பெயர்ந்திருந்தனர். எனினும் ஓரளவு சுமுகமான நிலைமை ஏற்பட்டதை அடுத்து பலர் சொந்த இடங்களுக்குத் திரும்பியிருந்தனர். கொடிகாமம் சந்தையும் ஆரம்பித்திருந்தது. பருத்தித்துறை- கொடிகாமம் பஸ்சேவை மற்றும் தட்டி வான் சேவை ஆகியவையும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

தற்போதைய ஷெல் வீச்சுச் சம்பவங்களினால் மக்கள் மத்தியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. நேற்று பருத்தித்துறை - கொடிகாமம் பஸ் சேவை வரணி வரையுமே இடம்பெற்றது. வரணிக்கு அப்பால் கொடிகாமத்துக்கு மக்கள் செல்லவும் அனுமதிக்கப்படவில்லை.(இ-31-109-173-117)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள், வெளிமாவட்டங்களில் பணிபுரியும் அரச ஊழியர்கள், கடும் சுகவீனமானவர்கள், ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் திகதியிடப்பட்ட பயண அனுமதிப்பத்திரங்கள் வைத்திருப்போர் ஆகியோரின் விவரங்களே இன்று பதிவு செய்யப்படவிருக்கின்றன.

இந்த விவரங்கள் அடங்கிய பட்டியல் யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு அனுப்பப்படும்.

சிவில் நிர்வாக அலுவலகம் பலாலி தலைமையகத்தின் அனுமதியை பெற்ற பின்னர் பயணிகளுக்கு பயணச் சீட்டை வழங்கும்.

பயணச் சீட்டுக்கள், யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் அமைந்துள்ள 'ஹெலிரூர்ஸ்' அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படவிருக்கின்றன.

ஒருவழிப் பயணத்துக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும், இருவழிப்பயணத்துக்கு 6 ஆயிரம் ரூபாவும் கட்டணமாக அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கைதாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதினால் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் தமது பயணத்தை தொடங்கும்வரை இவர்கள் பராமரிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் - இவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என்பதால் இவர்களுக்கு வேண்டிய உணவை விநியோகிப்பது அரசாங்கத்தின் கடமை என மன்று கருதுவதாலும் -

இவர்கள் யாழ்.குடாவிலிருந்து திருகோணமலைக்கு புறப்படும்வரை யாழ்.அரச அதிபர் இதனைக் கவனத்துக்கு எடுத்து நீதிமன்று குறிப்பிட்டவற்றை உடனடியாக விநியோகிக்கவும் வழங்கவும் நடவடிக்கை எடுத்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 13ஆம் திகதி யாழ்.நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட இந்தப் பதினைந்து பேரையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைப்பதற்கும் -

அதுவரையும் இருபாலையிலுள்ள கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் அவர்களைத் தங்க வைப்பதற்கும் - ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ-5-6-10)

## காங்கேசனில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை நடைபெற்று வந்த பயணிகள் கப்பற் சேவை - "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பற் சேவை மட்டுமன்றி நோயாளர் கப்பற் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

காலநிலை சீராகி பயணிகள் கப்பற் சேவை நடைபெற சில மாதங்கள் செல்லலாம் எனக் கருதப்படுகின்றது.

இதனால், பிரஸ்தாப கப்பற் சேவையை காங்கேசன்துறையில் இருந்து நடத்துவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பாதுகாப்பு உத்தரவாதம் கேட்டுள்ளதாகத் தமக்கு தெரியவந்துள்ளதாக அரசாங்க அதிகாரி ஒருவர் சொன்னார்.

மழைகாலம் முழுவதிலும் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால், பொதுமக்களின் பயணங்கள் தடைப்படக் கூடாது - தாமதமாகக் கூடாது - என்பதில் தாம் அக்கறை கொண்டுள்ளதாக செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)


மொடேன் கல்வி நிலையம்

A/L 2000 DAY CLASS

கலை, வர்த்தக மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

கணக்கியல்

திரு. பவான்

காலம்: இன்று (15.11.2000) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணி (ப.நே.)

நெல்லியடி – கரவெட்டி. (C/13831)



இன்றைய வீடியோ CD வெளியீடு

பிரபுவின்

★ வண்ணத்தமிழ் பாட்டு

(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)

மூர்த்தி வீடியோ

மானிப்பாய்

(C/13839)



ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்

(1) ஆரம்பப் பிரிவு (தரம் 03 - 05)

(2) பாலர் வகுப்பு

(3) தரம் 06 - 11 வரையான

அனைத்துப் பாடங்களுக்கும்

★ *போதிய கல்வித் தகைமைகள்*

★ *விசேட பயிற்சிகள்*

★ *கற்பித்தல் அனுபவங்கள்*

உடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

நிறுவனத்திலிருந்து 5 Km சுற்றாடலில் உள்ளவர்களுக்கும், நிறுவன பழைய மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 19-11-2000

- அதிபர்

The Express Institute

Irupalai, Kopay.

(80536)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.